ஹோமியோபதி

நிர்வாக ஆசிரியர் : டாக்டர் V. R. மூர்த்தி

மே 1952

வாய்ப் பேச்சில் வீரரடி ... 2
நமது நேயர்களுக்கு ... 7
டாக்டர் ஹானிமன் (முன்தொடர்ச்சி) ... 9
திருச்சி மகாநாடு ... 14
பிரசவ சுரம் ... 16
கீல் வாதம் ... 18
வயிற்று உப்பிசம் ... 21
ஹோமியோபதியின் வேதாந்தம் ... 23

டாக்டர் மூர்த்தியின்
"கோல்டுராப்ஸ்"
[காச நிவாரணி]
பாட்டில் ஒன்றுக்கு விலை ரூ. 3–12–0
இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்
கும்பகோணம்

ஹோமியோபதி

VOL. 6 மே 1952 No. 5

"வாய்ப்பேச்சில் வீரரடி"

நமது மஹா கவி பாரதியார் நம்மில் சிலரைப் பற்றிக் குறிப்பிடும்போது "வாய்ப்பேச்சில் வீரரடி" என்றார். இது எவ்வளவு உண்மை என்பது அவ்வப்போது நமக்கு நிரூபணம் ஆகிக்கொண்டேதான் இருக்கிறது. சமீப காலத்தில் டில்லி மாநகரிலே இந்தியன் மெடிகல் கௌன்சில் என்னும் கூட்டத்திலே நிறைவேறி இருக்கிற ஒரு தீர்மானத்தின் சாரம் நாம் மேலே எடுத்துக்காட்டிய பாரதியாரின் வாக்கை நினைப்பூட்டுவதாக இருக்கிறது.

சென்ற வருடம் கூடிய சுகாதார மந்திரிகள் மஹாநாட்டில் நிறைவேறிய ஒரு தீர்மானத்தில், நாட்டில் அல்லோபதி தவிர நடமாடும் இதர வைத்திய முறைகளாகிய ஹோமியோபதி, ஆயுர்வேதம் போன்ற இதர வைத்திய முறைகளுக்கும் நல்ல முறையில் கல்லூரிகள் ஸ்தாபித்து, ஆங்கில வைத்திய முறைக்குள்ள அடிப்படைப் பாடங்களைச் சொல்லிக்கொடுத்து, அதன்மேல் குறிப்பிட்ட வைத்திய முறைகளுக்குள்ள பாடங்களைச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. நமது சுகாதார மந்திரிகள் கூடி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினார்களே தவிர, அவ்வாறு செய்வது அந்தந்த மாகாணத்தின் பொறுப்பு ஆதலின் தற்சமயத்தில் நமது மாகாணங்களின் நிதிகள் இம்மாதிரியான ஒரு புது விஷயத்திற்கு இடமளிக்காததாகையால், இது விஷயம் தீர்மானமாகவே இருந்து வருகிறது. இந்தத் தீர்மானம் தவறு என்று எடுத்துக்காட்டும் வகையிலே, நமது தேசத்தின் அரசாங்கத்திற்கு வைத்திய விஷயமாக ஆலோசனை கூற, எல்லாவற்றிற்கும் மேலாக, நியமிக்கப்

பட்டிருக்கும் "இந்தியன் வைத்திய கௌன்சில்" இப்பொழுது தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. இதன் சாரம் "இந்தியாவிற்கு அல்லோபதி தவிர வேறு யாதொரு வைத்தியமும் தேவையில்லை, இருக்கவும் கூடாது. மற்ற வைத்திய முறைகளுக்குத் தனிக் கல்லூரிகள் தேவையில்லை, ஆரம்பிக்கவும் கூடாது. அப்படியே வேறு வைத்திய முறைகள் தேவையாயின், அல்லோபதி படித்துப் பட்டம் பெற்றவர்கள் அதற்கு மேல் மேற்படிப்பாக இதர வைத்திய முறைகளைப் படித்துக்கொள்ளலாம்". இதற்கு மேற்கோளாக, இம்மாதிரியான நிலைமையில் தான் மேல் நாடுகளாகிய இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளில் நடக்கின்றனவென்றும் சொல்லுகிறார்கள். இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றிய, "வைத்தியக் கௌன்சி"லில் மெம்பர்களாக இருப்பவர்கள், அதாவது உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்கள், அனைவரும் அல்லோபதி டாக்டர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அல்லோபதி வைத்திய முறையே சிறந்ததெனவும், நம் நாட்டிற்கு உகந்ததெனவும், வைத்திய சாஸ்திரமே அல்லோபதிக்குக் கட்டுப்பட்டதெனவும், நாம் ஒப்புக்கொண்டால்கூட நமது தேசத்திற்கு வைத்திய வசதி எவ்வளவு தேவையோ அவ்வளவும் அல்லோபதியால் இன்று பூர்த்தி செய்து வைக்க முடியுமா? அல்லது இன்று இல்லாவிட்டாலும், சமீப காலத்திலோ, அல்லது நமது வாழ்நாட்களுக்குள்ளேயோ, பூர்த்திசெய்து வைக்கமுடியுமா வென்னும் கேள்விக்கு பதில் காணப்புகின், மேலே காட்டிய தீர்மானம் உண்மையிலேயே உபயோகமற்றது என்பது விளங்கும். நமது நாட்டில் தற்சமயம் வருடா வருடம் அல்லோபதி கல்லூரிகளில் பாஸ் செய்துவிட்டுத் தொழில் நடத்த வரும் டாக்டர்களின் எண்ணிக்கை, நாட்டின் தேவைக்குப் போதுமானது இல்லை எனவும், வருடா வருடம் இறந்துவிடுவதாலும், மற்றும் இதர காரணங்களாலும், தொழிலிலிருந்து வெளியேறும் டாக்டர்களின் இடங்களைப் பூர்த்தி செய்தபின்

மிச்சமாக இருப்பது அதாவது நமது தேச டாக்டர்களின் எண்ணிக்கையில் வருடா வருடம் அதிகமாவது மிகவும் குறைவு என்றும், இது போதாதென்றும் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். ஆகவே இது விஷயமாக அவ்வப்போது ஆங்காங்கே வெளியிடப்படும் புள்ளி விபரங்களிலிருந்து பார்க்குமளவில் தற்சமயத்தில் நமது தேசத்தின் ஜனத் தொகைக்குத் தேவையான டாக்டர்கள் இல்லை என்பது தெரியவரும். தவிர, இங்கிலாந்தில் அப்படி இருக்கிறது, அமெரிக்காவில் இப்படி இருக்கிறது, ஆகவே நமது தேசத்திலும் அப்படித்தான் இருக்கவேண்டுமென்று வாய்ப்பேச்சில் வீரர்கள் கூறி விடுகிறார்கள்.

உலகின்கண் பல்வேறு தேசங்களில் மக்களுக்குக் கிடைக்கும் வைத்திய உதவியைப் பற்றி **"பீப்பிள்ஸ் ஹெல்த்"** என்னும் சஞ்சிகையில் கீழ்கண்ட புள்ளி விபரங்கள் சில மாதங்களுக்கு முன் வெளியாகி இருக்கிறது.

இதன்படி உலகின் பல தேசங்களிலே 1950ம் வருடத்தில் டாக்டர்களின் கணக்கு வருமாறு:—

அமெரிக்காவின் ஜனசங்கியையில்		750	பேருக்கு ஒரு டாக்டர் வீதமும்
இங்கிலாந்தில்	,,	870	,,
ஐஸ்லாந்தில்	,,	890	,,
டென்மார்க்கில்	,,	950	,,
கானடாவில்	,,	970	,,
நியூஜிலாந்தில்	,,	980	,,
இந்தியாவில்	,,	6,300	,,

அதாவது இந்தியாவில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற மொத்த டாக்டர்களின் எண்ணிக்கையே 47,524 தான். இந்த நிலைமையிலும், நமது மாஹாணங்கள் சமீப காலத்தில் அதிகப்படியான வைத்தியக் கல்லூரிகளை ஏற்படுத்தி, அதிகமான டாக்டர்களை உற்பத்தி செய்ய முடியாமலிருக்கும் நிலைமையிலும், அல்லோபதி தவிர வேறு வைத்திய முறை

களே கூடாது என்று கூறுவதில் அர்த்தமே இல்லையல்லவா? தவிர அல்லோபதி முறை மாத்திரம் படித்து விட்டு உடனே தொழிலுக்கு வந்தும், தேவையான அளவு டாக்டர்கள் கிடையாதென்னும் பொழுது, அல்லோபதிக் கல்லூரியில் ஆறு வருடங்களைக் கழித்துவிட்டு மறுபடியும் ஹோமியோபதி படிக்க எவ்வளவு பேர்களால் முடியும், அல்லது சாத்தியம் என்பது யோஜனை செய்யப்பட வேண்டிய விஷயமல்லவா?

நமது இராஜ்ஜியத்தில் இன்று பெரிய பட்டினங்களில் தவிர, கிராமங்களில் அல்லோபதி வைத்திய உதவி கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. டாக்டர்கள் கிடைக்காத காரணத்தால் அனேக "ரூரல் டிஸ்பென்ஸரிகள்" பல வருடங்களாக மூடிக்கிடக்கின்றன. அரசாங்கத்திலிருந்து ஓரளவு உபகாரச் சம்பளமும் மருந்துகளும் கிடைத்தும்கூட கிராமத்தில் சேவைசெய்ய வைத்தியர்கள் கிடைக்காத அளவிலே, சொந்தமாகத் தொழில் நடத்தும் அல்லோபதியர்கள் எந்தக் கிராமத்தில் கிடைப்பார் என்று சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு நிலைமை தெட்டென விளங்கிவிடும். இந்த நிலைமையிலே, இன்று கிராமாந்திர மக்களுக்கு அவ்வப்போது தோன்றி மறையும் வியாதிகளுக்கு வைத்திய உதவி கிடைப்பது, அல்லோபதி அல்லாத இதர முறைகளால்தான். இந்த உதவியும் கிடைக்கக்கூடாது, நமது கிராம மக்கள் சிறிய வைத்திய உதவிக்குக்கூட 5, 10 அல்லது 15 மைல்களுக்கு அப்பாலுள்ள இடங்களுக்குத்தான் செல்ல வேண்டுமென்றால் "வைத்தியக் கௌன்சில்" செய்த தீர்மானம் ஞாயமானதுதான்!

தற்கால நிலைமையில் நாட்டுக்குத் தேவையான வைத்தியர்களை உற்பத்தி செய்து கொடுக்க முடியாதவர்கள், அல்லோபதி வைத்தியம் தவிர வேறு ஒன்றும் நமக்குத் தேவையில்லை என்பதுதான் நமக்கு "வாய்ப்பேச்சில் வீரரடி" என்பதை ஞாபகமூட்டுகின்றது.

இந்த அளவுக்கு வைத்தியப் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் நம் நாட்டில், வைத்திய உதவி கிடைக்காத இடங்களில்

மக்களுக்கு இன்றியமையாத ஒரு சேவையைச் செய்துவரும் ஒரு மாபெரும் கூட்டமாகிய, ஹோமியோபதியர்களையும், இதர வைத்திய முறைகளைப் பயிலுபவர்களையும், தொழில் நடத்த (அதாவது மக்களுக்குச் சேவை செய்ய) விடக் கூடாது என்ற கூக்குறல்கள் இந்தியன் மெடிகல் கௌன்சில் முதல் தனியாகத் தொழில் நடத்தும் ஒரு அல்லோபதி L. M. P. வரையில் அவ்வப்போது சமயம் கிடைக்கும் போதெல்லாம், சொல்லிக்கொண்டிருக்கிற பல்லவிதான். சென்ற பிப்ரவரி மாதத்தில் அஹமதாபாத்தில் கூடிய அகில இந்திய மெடிகல் அஸோஸியேஷன் வருடாந்திர கூட்டத்தில் தலைமை தாங்கிய டாக்டர் T. S. திருமூர்த்தி, B. A., M.B & C. M., அவர்களும் அல்லோபதி அல்லாத இதர வைத்தியர்கள் போலி எனப் பொருள்படும்படி பேசி இருக்கின்றார்கள். ஆனால் இவர் இதுவரையில் தொழில் நடத்துபவர்களை அவ்வாறு செய்யும் படி அனுமதித்துவிட்டு, இனியாவது புதிதாக வருபவர்களைக் கட்டுப்பாட்டின் மூலம் வரவிடாமல் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறார். இதையேதான் நாமும் கோருகிறோம். இது வரையில் தொழில் நடத்தி மக்களுக்குத் தொண்டாற்றி வருபவர்களுக்குச் கௌரவ மான ஸ்தானத்தை அளித்துவிட்டு, இனி ஹோமியோபதியர் களாகத் தொழில் நடத்த விரும்புபவர்களுக்கு அவர்கள் படித்துத் தேர்ச்சி பெற அரசாங்கம் கல்லூரிகளை ஏற்படுத்து வதின் மூலம் வசதி அளிக்க வேண்டுமென்றே நாம் பல காலமாக வற்புறுத்தி வருகிறோம்.

ஹோமியோபதி முறைக்கு சரியான அங்கீகாரம் கொடுத்து, அதை முறைப்படி வளரச் செய்து தேவையுள்ள வர்களுக்குச் சரியான பயிர்ச்சி அளிக்கவும் அரசாங்கம் முன் வருமானல் இந்தியாவில் தற்சமயம் ஏற்பட்டிருக்கிற வைத் தியப் பஞ்சத்தை மிகக் குறைந்த காலத்திலும், ஏராளமான செலவு இல்லாமலும் தீர்த்து வைக்கலாம் என்பது திண்ணம்.

நமது நேயர்களுக்கு

நம் தமிழ் நாட்டில், முக்கியமாக கிராமாந்திரப் பிரதேசத்தில் இன்று மக்களுக்குக் கிடைத்து வரும் வைத்திய உதவியைப் பற்றிப் புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்டால் அது ஹோமியோபதி பற்றி அரசாங்க சலுகைகளைக் கேட்க உண்மையிலேயே பிரயோஜனகரமாக இருக்கும். நமது அன்பர்கள் ஆங்காங்கு ஏற்கனவே நடந்து வந்து ஆனால் பிற்காலத்தில் மூடப்பட்டுக் கிடக்கும் 'ரூரல் டிஸ்பென்ஸரி"களைப் பற்றிய விபரங்களையும் அவை ஏற்கனவே எந்தெந்த வட்டாரங்களுக்கு உபயோககரமாக இருந்ததென்பது பற்றியும், எந்தெந்த ரூரல் டிஸ்பென்ஸரிகளில் இன்று அல்லோபதியரல்லாத வைத்தியர்கள் டாக்டர்களாக இருக்கிறார்கள் என்பது பற்றியும், எந்தெந்த இடங்களில் அரசாங்க வைத்திய வசதிகள் தேவை இருந்தும் கிடைப்பதில்லை என்பது பற்றியும், இந்த இடங்களில் தற்சமயம் எந்த விதமான வைத்திய வசதி மக்களுக்குக் கிடைக்கிறது என்பது பற்றியும் நமக்கு எழுதி அனுப்பினால், தகுதியானவற்றை நமது ஹோமியோபதியில் பிரசுரிக்கலாம். அவ்வாறு அனுப்பப்படும் விபரங்கள் உண்மையானவையாயும், தகுந்த ஆதாரங்களுடன் கூடினவையாயும் இருக்கவேண்டும்.

ஆசிரியர் "ஹோமியோபதி"

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட்



டைரெக்டரும் 1952ம் வருடத்து நேர்முக வகுப்பு மாணவ மாணவியரும்

"டாக்டர் ஹானிமன்"

(முன் இதழ் தொடர்ச்சி)

இப்புத்தகம் வெளிவந்தவுடன் ஹானிமெனுக்குப் புகழ்மாலைகள் கிடைக்கவில்லை, ஆனால் வசைமாலைகளும், பரிகாசமும்தான் வெகுமதியாகக் கிடைத்தன. ஒரு மனிதன் சுமார் 20 வருடங்களுக்கு மேல் பாடுபட்டு உழைத்து ஒரு உண்மையான வைத்திய முறையைக் கண்டுபிடித்து அதனால் தீராதெனக் கைவிட்ட பல வியாதிகளைச் சொஸ்தம் செய்தவர், போலி என்றும் மந்திரவாதியென்றும், ஏமாற்றுக்காரன் என்றும் இகழப்பட்டார். எது எப்படியாயினும் ஹானிமென் சலியாமல் உழைத்து தன்னுடைய **மெட்டீரியா மெடிகா ப்யூரா** என்ற நூலையும் வெளியிட்டார்.

இப்புத்தகங்களை வெளியிட்டதுடன் நில்லாமல் தான் ஆதிகாலத்தில் உழைத்த நகரமாகிய லிப்ஸிக்குக்கு வந்து அங்கு ஒரு ஹோமியோபதி கல்லூரியையும், வைத்தியசாலையையும் ஆரம்பிக்க உத்தேசித்தார். ஆனால் அவருக்கு யார் உதவி செய்வார்கள்? ஆகவே அவர் செய்யக் கூடியது ஹோமியோபதியைப் பற்றி சொற்பொழிவு ஆற்றுவதுதான் என நினைத்தார். ஆகவே 1811-ம் வருடத்தில் தன்னுடைய அபிப்ராயங்களை வெளியிட்டு ஒரு இன்ஸ்டிட்யூட் ஆரம்பித்து ஹோமியோபதியைப் பற்றிய சொற்பொழிவு ஆற்றுவதாகத் தெரிவித்தார். லிப்ஸிக் சர்வகலாசாலை அதிகாரிகளிடம் தன் அபிப்ராயத்தைத் தெரிவித்தார். அவர்கள் அதற்கு உடனடியாக சம்மதிக்கவில்லை. ஆனால் அங்குள்ள அதிகாரிகளின் முன்னிலையில் முதலில் ஒரு அறிவுக்கட்டுரையை எழுதிப்படித்து அது ஒழுங்காக இருக்குமானால், அதன் பின்னர் இவ்விஷயம் ஆலோசிக்கப்படும் என்று அறிவித்தனர். அவ்வாறே 1812-ம் வருடம் ஜூன்-மீ 12உலத்தீன் பாஷையில் எழுதப்பட்ட ஒரு கட்டுரையை வாசித்து அங்கிருந்த அனைவரின் பாராட்டுதலையும் பெற்றார். இவ்வாறாக 1812-ம் வருடக் கடைசியில் இவருடைய சொற்பொழிவுகள் ஆரம்பமாயின. இவை 1821-ம் வருடம் வரையில் நடைபெற்றன. வாரத்தில் இரண்டு தினங்கள் ஒவ்வொரு தினமும் சுமார் ஒரு மணி நேரத்திற்கே இந்த சொற்பொழிவுகள் நடந்தன. இதற்கும் ஆரம்பத்தில் இருந்த கூட்டம் வரவர குறைந்துகொண்டே வந்தது. எனினும் இக்காலத்தில் பல நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு மேலும் மேலும் 'ஔஷத நிர்ணயங்கள்' (Drug Proving) செய்து "மெட்டீரியா மெடிகா ப்யூராவின்" பல பதிப்புகளை வெளியிட்டார்.

விடாமுயற்சியுடன் தான்கண்ட உண்மைகளை சமயம் கிடைக்கும் போது பிரபலபடுத்திக்கொண்டே இருந்தாரெனினும், அங்கிருந்த ஆசிரியர் களும், பேராசிரியர்களும், பல மாணவர்களும்கூட அவருக்கு எல்லை யில்லாத தொல்லையே கொடுத்து வந்தனர். ஆகவே அங்கு அவருடைய வாழ்க்கை மிகவும் கஷ்டம் நிறைந்ததாகவே இருந்து வந்தது ஹானி மெனிடம் அன்பு கொண்ட ஒரு மாணவர் இருந்தால் அவர் பரீட்சையில் தேராதது திண்ணம்!

இதிலிருந்து ஒரு உண்மை வெளியாயிற்று. எவ்வளவுதான் படிப் பிருந்தாலும் எவ்வளவுதான் உலக அனுபவமிருந்தாலும், நல்லவர்போல் நடித்தாலும், தன்னுடைய சுயநலம் பாதிக்கும் என்று தோன்றினல் நம்மிடையே பலர் எந்த அளவுக்கும் இறங்கிவிடுவார்கள் என்பது நிச்சயம்.

ஹானிமெனை ஒழிக்கச் செய்த எல்லா சதிகளும் வெற்றி பெருமல் போகவே 1819-ம் வருடம் லீப்ஸிக்கில் இருந்த அபாதிகரிகள் ஒன்று சேர்ந்து ஹானிமென் தன் ஒளஷதங்களைத் தானே தயார் செய்துகொள்வது சட்டப்படி குற்றம் என்று கேஸ் தொடுத்தனர். 1820-ம் வருடம் ஹானிமென் கோர்ட் ஏறி, அபாதிகரிகள் தயார் செய்வது அல்லோபதிக் கூட்டு ஒளஷதங்கள் என்றும், ஹோமியோபதியில் ஒளஷதங்கள் தயாரிக் கும் முறையே வேறு என்றும், இதைப்பற்றி அவர்கள் யாதொன்றும் அறிய மாட்டார்கள் என்றும், ஆகவே தன்னுடைய ஒளஷதங்களை தான் தயாரித்துக்கொள்வது அவசியமாகிறது என்றும் வாதாடினர். ஆனல் மாபெரும் எதிர்ப்புச் சக்திகளுக்கிடையே இவ்விவாதங்கள் என்ன செய்யும். இனி அவர் தயாரித்துக்கொடுக்கும் ஒவ்வொரு வேளை மருந்துக்கும் 20 டாலர்கள் வீதம் அபாரதம் செலுத்த வேண்டும் என்று கோர்ட் தீர்ப்புக் கூறியது. ஆனல் இவ்வளவு துர்அதிர்ஷ்டத்திற்கிடையே ஒரு சிறு அதிர்ஷ் டமும் ஹானிமெனுக்கு ஏற்பட்டது. அந்த வருடத்தில் நெப்போலியனேடு நேர்ந்த யுத்தத்தில் வெற்றிபெற்ற ஜெனரல், ஆஸ்திரியா தேசத்து பீல்டு மார்ஷெல் வான் ஸ்வார்ட்ஸன் பர்க். (Field Marshal von Schwartzan berg) என்பவர் வியாதியுற்று ஹானிமெனின் சிகிச்சையை நாடினர். அதனல் இவர்மேல் ஏற்பட்ட கேசின் தீர்ப்பு சற்று ஒத்திவைக்கப்பட்டது. ஆனல் இந்த ஜெனரலின் வியாதியோ தீர்க்கமுடியாதது. ஆதியில் சற்று சௌகரியம் ஏற்படுவது போலிருந்தாலும், அவர் சுமார் 6 மாதகாலத்தில் இறந்து விட்டார். அவர் இறப்பதற்கு சில தினங்கள் முன்னதாக அல்லோ பதி டாக்டர்கள், ஹானிமென் அறியாமல் அவருடைய இரத்தக்குழாயி லிருந்து இரத்த வெளியேற்றம் செய்தனர். இது தெரிந்த பிறகு ஹானிமென் நோயாளியைப் பார்க்கச் செல்லாமலே இருந்து விட்டார். ஆனல் ஜெனரல் இறந்தது ஹானிமெனல்தான் என்ற வதந்தியைக் கிளப்பி, அவர்மேலுள்ள கேசை மேலும் வலுப்படுத்தி

உபத்திரவிக்க ஆரம்பித்தனர். எதிர்ப்புக் கக்ஷியில் பிரதானமாக இருந்தவர் டாக்டர் க்ளேரஸ் என்ற ஒரு வைத்தியர். இவருடைய முயற்சியினுல் ஹானிமெனிடமும், அவரிடம் பக்தி கொண்டவரிடமும் இருந்த ஔஷதங்கள் பறிக்கப்பட்டன.

அன்றென்ன, இன்றுகூட சிலஇடங்களில் ஒரு விசித்திர நிலைமையைக் காணலாம். "பரிகாசத்தினுல் ஹோமியோபதியைக் கொல்ல முடியா விட்டால், சட்டபூர்வமாக அதைக் கொல்லு. அப்படியும் முடியாவிட்டால், உன் பலத்தினுல் அதைக் கொன்றேவிடு" என்பதுபோல, லீப்ஸிக்கி லிருந்த பல டாக்டர்களும், அபாதிகரிகளும் ஒன்றுசேர்ந்து, போலீசின் உதவியைக்கொண்டு ஹானிமெனை ஊரைவிட்டே துரத்திவிட ஏற்பாடுகள் செய்துவிட்டனர். ஆனுல் "டவுன் கவுன்சில்" என்னும் நகராட்சிக்குழு, ஹானிமென் பக்கத்திலிருந்து இது நடவாமல் செய்தனர். இந்த சமயத்தில் அதாவது 1821ம் வருடத்தில் ஹானிமெனின் வாழ்க்கையில் நற்காலம் பிறக்க ஆரம்பித்தது.

வான் ஸ்டெர்நெக் (Von Sternegk) என்னும் ஒரு பிரபு ஏற்கனவே ஹானிமெனிடம் சிகிச்சை பெற்று ஒரு தீராத வியாதியிலிருந்து விடுதலை பெற்றவர். இவருடைய சிபார்சின்மேல் கோதன் (Coethen) என்ற பிரதேசத்தின் சிற்றரசரான ப்ரடரிக் (Grand Duke Frederick of Anhalt-Coethen) என்பவர் ஹானிமெனை தன் ஊருக்கு வந்து தனக்கு அரசாங்க வைத்தியராக இருக்கும்படியும், தன் இராஜ்ஜியத்தில் வைத்தியராக தொழில் நடத்தவும் அனுமதி அளித்தார். இந்த ப்ரடரிக் சிற்றரசர் ஒரு தீராத வியாதியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். இவ்வியாதியை ஹானிமென் தன்னுடைய புதுமுறையால் தீர்த்துவைக்கவும், சிற்றரசர் சந்தோஷமுற்று ஹானிமெனை அங்கேயே தங்கும்படி அனுமதித்து அவரை மிகுந்த மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்தினர். இங்கு 1835 வருடம் வரையில் 14 வருடங்கள் ஹானிமென் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் காலம் கழித்ததுடன் இங்கு தமது ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்திவந்து பல அரிய விஷயங்களை வெளியிட்டார்.

கோதனில் ஹானிமென் வாழுங்காலத்தில் 1829ம் வருடம் ஆகஸ்டு-மீ 10உ, ஹானிமென் டாக்டர் பட்டம்பெற்ற (50வது வருடக) கொண்டாட்டம் நடைபெற்றது. அது சமயம் அவருடைய சிஷ்யர்களும், நண்பர்களும் அதை வெகு விமரிசையாகக் கொண்டாடினர். அவருக்கு அனேக பரிசுகள் வழங்கப்பட்டன. அவருக்கு M. D. பட்டம் வழங்கிய எர்லாஞ்சன் சர்வகலாசாலை வாழ்த்துச்செய்தி அனுப்பியது. அனேக வாழ்த்துப்பாக்கள் வந்து குவிந்தன. இவைகளுக்கிடையே அன்று "ஜெர்மெனியின் சென்ட்ரல் ஹோமியோபதி ஸ்தாபனம்" ஒன்றும் நிறுவப்பட்டது.

வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் தோல்வியையும், எதிர்ப்பையுமே இதுவரையில் கண்ட ஹானிமென் அன்று திணறவடிக்கப்பட்டார். ஆகவே யாதொன்றும் சொல்லமுடியாமல் கடவுளையும், நண்பர்களையும், மிகுந்த பணிவுடன் போற்றினர்.

அன்று வந்து குவிந்த வாழ்த்துச் செய்திகளில் "ட்யூக் பர்டினண்ட்" என்ற சிற்றரசர் அனுப்பிய செய்தியின் சாரம் கீழே தரப்படுகின்றது.

அன்புமிக்க டாக்டர் அவர்களுக்கு!

தாங்கள் வைத்தியத் தொழில் ஆரம்பித்த 50வது வருடத்தில் தங்களுக்கு ஆசிகூற மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். தாங்கள் மனித சமூகத்திற்கு எக்காலமும் உபயோகப்படும்படியான ஒரு பெரிய சேவை செய்திருக்கிறீர். தங்களுடைய ஹோமியோபதி வைத்தியமுறை இன்று உலகம் முழுவதும் பரவி இருக்கிறது. இன்று தங்களைப் போற்றக்கூடியிருக்கும் பெரியார்களுடன் நானும் கலந்துகொள்ள சந்தோஷமடைகிறேன்.

உங்களுடைய அரசனாகிய நான் இந்தநாட்டிற்கும், எனக்கும் தாங்கள் செய்திருக்கும் சேவையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தங்கள் அன்புள்ள நண்பன்,

ட்யூக் பர்டினண்ட்.

இம்மாதிரியாக அதிர்ஷ்ட தேவதை சற்று கண்ணெடுத்துப் பார்க்குமளவில், அவருக்கு மிகுந்த வருத்தம் தரக்கூடிய ஒரு பெரிய நஷ்டம் ஏற்பட்டது. அவருடன் கஷ்டத்திலும், சுகத்திலும் பங்குகொண்டு அவரைக் கடவுளெனப் போற்றி அவர் காரியங்களையும் குடும்பத்தையும் கவனித்து வந்த அவருடைய அருமை மனைவி 1830-ம் ஆண்டு மார்ச்சுமீ 31உ காலமானர். அது சமயம் அவருடைய வயது 75; அந்த அம்மையாரின் வயது 67.

மனைவியின் பிரிவை அவருடைய வேதாந்தம் அதிகம் பாராட்டாமல் செய்தது. குடும்ப விஷயங்களை அவருடைய பெண்கள் மேற்கொண்டனர்.

1931-ம் ஆண்டில் ஐரோப்பாவில் காலரா நோய் பெருவாரியாகப் பரவி அனேக உயிர்களைப் பலிகொண்டது. தான் ஒரு காலரா வியாதியஸ்தரை நேரில் காணவிடினும், அவ்வியாதியின் குறிகளைக் கேட்டறிந்து, **காம்பர், குப்ரம், விராட்ரம் ஆல்பம், பிரையோனியா, ரஸ்டாக்ஸ்** இந்த ஔஷதங்களைக் கொண்டே எவ்வாறு இந்த வியாதியை சொஸ்தம் செய்யலாம் என்று நான்கு சிறு பிரசுரங்களை வெளியிட்டார். இதே சிகிச்சை

அதுசமயம் பல ஆயிரக்கணக்கானவர்களுடைய சாவைத் தவிர்த்ததுடன் இன்றளவும் உண்மையாகவே இருந்து வருகின்றது.

அடுத்தபடியாக 1833-ம் ஆண்டில் ஜனவரி-மீ 22உ லிப்ஸிக் நகரத்தில் 24 படுக்கைகளுடன் கூடிய ஒரு ஹோமியோபதி ஆஸ்பத்திரி ஆரம்பித்ததாகும்.

ஹானிமென் கோதனில் இருந்த காலேயில் கடைசியாக நிகழ்ந்த சம்பவம், 1935-ம் ஆண்டில் ஜனவரி 28உ ஹானிமெனின் இரண்டாவது மணமாகும். **மிலேனி டி ஹார்வில்லி** (Melanie D' Harvilly) என்னும் ஒரு ப்ரெஞ்சு மாதை தன்னுடைய 80-வது வயதில் (அவளுடைய 35-வது வயதில்) அவர் மணந்தார். இம்மாது நல்ல படிப்பும் அறிவும், சொத்தும் உடையவள். ஹானிமெனின் புது வைத்திய முறையைக் கேள்விப்பட்டு அவரிடம் வைத்தியத்திற்குச் சென்று அங்கிருந்த காலேயில் இருவருக்கும் பரிச்சியம் ஏற்பட்டு மணம் நடந்தது. இந்தத் திருமணத்திற்கு முன் ஹானிமென் தன் பொருள்களே உயிலின் மூலம் தன் மக்களுக்குக் கொடுத்து விட்டார். 1835-ம் வருடம் ஜூன் மாதம் 14உ ஹானிமெனும் அவருடைய மனேவியும் கோதனேவிட்டு பாரிசுக்கு வந்து சேர்ந்தனர். இங்கு ஹானிமெனின் பிந்திய வாழ்க்கை சீரியமுறையில் நடந்து வந்தது. இவருடைய மனேவியின் முயற்சியினல் ப்ரெஞ்சு அரசாங்கத்திலிருந்து அங்கு ஹோமியோபதித் தொழில் நடத்த அதிகாரம் பெற்று, ஹானிமெனும அவரிடம் வைத்தியம் கற்ற அவர் மனேவியும் விரிவாகத் தொழில் நடத்தினர்.

1832ல் ஆரம்பிக்கப்பட்ட ப்ரெஞ்சு ஹோமியோபதிக் கழகம் அவரை கௌரவத் தலேவராகத் தேர்ந்தெடுத்தது. அதன்பின்னர் 1843ம் ஆண்டு ஜுலே-மீ 2உ வரையில் அவர் மகிழ்ச்சியுடனும், மன நிம்மதியுடனும் ப்ரெஞ்சு தேசத்தில் பாரிஸ் நகரில் வாழ்ந்துவந்து அந்தநாளில் இயற்கை எய்தினர்.

ஹானிமென் இறக்கும்போது அவருடைய வயது 88, கடைசிவரையில் சுய நினேவுடனேயே இருந்தார். அவருடைய வாழ்நாளின் முக்கால் பாகம், 66 வருடங்கள் வாழ்க்கையுடன் போராடுவதிலேயே கழித்தார். கால் பாகம் 22 வருடங்களே வாழ்க்கையில் வெற்றியையும் அமைதியையும் கண்டார்.

இவ்வளவு கஷ்டங்களுக்கிடையே தயாரித்து நமக்கு வைத்துவிட்டுப் போன நமது தந்தையாரின் சொத்தை நாம் நல்லமுறையில் கையாண்டு உலகிலே தோன்றும் வியாதிகளுடன் போராடி வெற்றி காணுவோமாயின் இதுவே நாம் நமதுதந்தைக்குச் செய்யும் பிரதி உபகாரமாக இருக்கும்.

திருச்சி மகாநாடு

அகில தமிழ் நாட்டு ஹோமியோபதியர் மூன்றுவது மகாநாடு சென்ற 27—4—52 ஞாயிற்றுக்கிழமை, திருச்சி உறுமி தனலெக்ஷ்மி வித்யாலயத்தில் குடிவாடா டாக்டர் எம் குருராஜு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்னை ஸ்ரீ கே. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் பி. ஏ, பி. எல். மகாநாட்டை ஆரம்பித்துவைத்தார். ஸ்ரீ கே. எம். வல்லத்தரசு அவர்கள் பி. ஏ. பி. எல். எம். பி. ஹானிமன், மகாத்மா காந்தி படங்களைத் திறந்து வைத்தார்.

அகில தமிழ் நாட்டு ஹோமியோபதி வைத்தியர்கள் சங்கத்தின் சேவைகளை டாக்டர் ஜீ. ஏ. பி. சார் எடுத்துக் கூறிவிட்டு, மகாநாட்டிற்கு டாக்டர் குருராஜுவை தலைமை தாங்கவும் ஸ்ரீ கிருஷ்ணஸாமி அய்யங்காரை மகாநாட்டை ஆரம்பித்துவைக்கவும் கோரினர். மகாநாட்டுக்கு வந்திருந்தவர்களை டாக்டர் பெரியராஜு வரவேற்றார்.

"ஹோமியோபதி வைத்திய முறையின் சிறப்பும், விஞ்ஞானமும் ஐயந்திரிபுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பினும், நமக்குரிய சரியான அந்தஸ்தைப் பெற நாம் மிகவும் சிரயத்துடன் உழைக்க வேண்டியுள்ளது. இம்முறை அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக இந்தியாவிலேயே பெருத்த அளவில் கையாளப்படுகிறது. முக்கியமாக வங்காளத்திலும், சென்னை மாகாணத்திலுமே இம்முறையை அனுஷ்டிப்பவர்கள் அதிகமாக உள்ளனர். அந்த அளவில் பலரது உழைப்பின் காரணமாக இம்முறை நமது நாட்டில் அதிக அளவில் பரவியிருக்கிறது" என்று டாக்டர் குருராஜு தமது தலைமையுரையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:— "இந்த முறையின் அங்கீகரிப்பு விஷயமாக இந்தியா முழுவதற்கும் ஒரே ரீதியான சட்டம் இயற்றப்படவேண்டும் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். என்றுலும் சில மாகாணங்கள் தனியான முறையில் மசோதாக்களை நிறைவேற்றியுள்ளன. நமது சென்னை சர்க்கார், 1947-ல் நிறுவிய "ஹோமியோபதி போர்ட் ஆப் ஸ்டடீஸ்" சிபார்சுகளை அனுசரிக்கக் கோருகிறேன். உடனடி சட்டத்தின் மூலம் ஹோமியோபதி அங்கீகரிக்கப்படவேண்டும். இது சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க "ஸ்டேட் ஹோமியோபதிக் மெடிகல் கவுன்ஸில்" ஒன்றை ஏற்படுத்த வேண்டும். ஸ்தல ஸ்தாபனங்களை ஹோமியோபதி வைத்தியசாலைகள் ஏற்படுத்த அனுமதிப்பதுடன், அதற்கு சர்க்கார் ஊக்கம் அளிக்க முன்வரவேண்டும்."

மகாநாட்டை ஆரம்பித்துவைத்த ஸ்ரீ கே. கிருஷ்ணசாமி அய்யங்கார், தமது உரையில் "சிலரது காரணமற்ற எரிச்சலாலும், இம்முறையைப்பற்றி அறிந்துகொள்ளாததாலும் இம்முறையின் வளர்ச்சிக்குப் பெரிதும் குந்தகம் விளைவிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் உதவி தேவை காரணமாக இதன் முன்னேற்றம் தடைபடுகிறது. மாகாண அரசியலில் புதிதாக ஏற்பட்டிற்கும் மாறுதல்களின் மூலமாகவாவது இவை கவனிக்கப்பட்டு, நோயினால் துடிக்கும் மக்களுக்கு பிரயோசனப்படுத்தப்படும் என்று நம்புகிறேன். மக்கள் நலத்திற்கும், இந்திய பொருளாதார சிக்கனத்திற்கும் ஏற்ற முறையாதலால் இம்முறையை அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ள முன் வரவேண்டும். ஹோமியோபதியர்கள் அந்தந்த ஜில்லாக்களில் சங்கங்கள் ஏற்படுத்தி மத்திய சங்கத்துடன் தொடர்பு வைத்துக் கொண்டால் இது விஷயமாக அரசாங்கத்துடன் போராட சௌகர்யமாக இருக்கும்" என்று கூறினார்.

மகாத்மா காந்தி, ஹானிமன் படங்களைத் திறந்துவைத்த ஸ்ரீ கே. எம். வல்லத்தரசு அவர்கள், மகாத்மா காந்தியின் புகழுக்கு ஹோமியோபதி முறை பாத்திரமாயிருக்கிறது என்றால் அது மிகவும் உயர்ந்த முறையாகத்தான் இருக்க வேண்டுமென்று தாம் அபிப்ராயப்படுவதாகவும், இம்முறையைப் பரப்ப அதிகப் பிரசாரம் தேவை என்றும், இதற்கு அரசியல் பிரசங்கிகளை இம்முறை கவர வேண்டும் என்று கூறினார்.

இடைவேளைக்குப் பின் பல ஹோமியோபதியர்கள் சொற்பொழிவாற்றினார்கள், கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

முதன் மந்திரி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரையும், நம்முறையில் மிகவும் சிரத்தை கொண்ட ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி மீண்டும் மருத்துவ மந்திரியாகியிருப்பதை இம்மகாநாடு வரவேற்கிறது, தொழில் நடத்திக் கொண்டிருக்கும் ஹோமியோபதியர்களை உடனடியாக ரிஜிஸ்டர் செய்ய இம்மகாநாடு கோருகிறது. ஆங்கில வைத்திய முறைக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே அந்தஸ்து இம்முறைக்கும் அளிக்கப்படவேண்டும் என்பதுடன், உடனடியாக அல்லோபதிக் ஆஸ்பத்திரிகளில் ஹோமியோபதி முறையில் நோயாளிகளைக் கவனித்து வைத்தியம் செய்ய தனி வார்டுகள் ஏற்படுத்தி ஹோமியோபதியர்களை நியமிக்கவும் கோருகிறது. ஹோமியோபதி சம்பந்தமான விஷயங்களை ஹோமியோபதியர்களைக் கொண்டே கவனிக்க இம்மகாநாடு அரசாங்கத்தைக் கோருகிறது. வேறு யாதொரு முறையுடனும் இணைக்காமல், இம்முறையைத் தனியாகவே போதிக்க முன் வரவேண்டும் என இம்மகாநாடு கோருகிறது.

பிரசவ சுரம்

டாக்டர் S. R. P. துரைப்பாண்டியன் M.I.H.

பிரசவ சுரம் என்பது நம்மவர்களுக்கு நன்கு தெரிந்ததோர் விஷயம், ஆயினும் அதைப்பற்றிய வரையில் இங்கு சிறிது கூற விரும்புகிறேன்.

பிரசவசுரம் என்பது ஒரு ஸ்திரீ பிரசவித்ததன்பின் சில தினங்களுக்குள்ளும், கருப்பச் சிதைவின் பின்னும் ஏற்படும் ஒருவித சுரம். இந்த சுரம் ஏற்படுவதற்கு காரணங்களை ஆராயப்புகின் சுகப் பிரசவம் அல்லாத கஷ்ட பிரசவத்தின் காரணமாகவும் கருப்பத்திலுள்ள சிசுவை வெளியேற்ற ஆயுதப்பிரயோகம் செய்ததின் காரணமாகவும், நஞ்சு (Placenta) சரியாக வெளிவராமையின் காரணமாகவும் பிரசவத்தின் பின்னால் ஏற்படும் கழிவு நீர் (Lochia) சரிவர வெளிப்படாமல் அமுக்கப்பட்டதின் காரணமாகவும் பிரசவத்தின்போது ஜெனன பாதையில் ஏற்பட்ட இரணங்கள் சரிவர கவனிக்கப்படாமல் சீழ்ப்பிடிக்க இடம்கொடுத்ததின் காரணமாகவும் சுரம் ஏற்பட ஏது ஆகிறது. அன்றியும் தொத்து நோய்க் கிருமிகள் தொத்திக்கொள்ள இடமளிப்பதுவும் காரணமாகலாம்.

இந்த நிலைமையில் சென்ற 12—3—1952-ல் என்னால் சிகிச்சை அளிக்கப்பட்ட ஒரு கேசைப்பற்றிய விஷயங்களை இங்கே தருகின்றேன், விரயல், நடுக்கம், அளவு கடந்த தாக வரட்சை, துரிதமான நாடி நடை, தாய்ப்பால் அமுக்கப்பட்டிருத்தல், பிரசவத்தின் பின்னால் ஏற்படும் கழிவு நீர் அமுக்கப்பட்டிருத்தல் (Lochia), தலை இடி. தலை கனம், பிடரியில் வலி, சரீரமெங்கிலும் அடித்துப்போட்டது போன்ற அசாதாரணமான வலி, ஓக்காளம், மயக்கம், பலவீனம், அமைதி அற்ற தன்மை, மலபந்தம் இவைகளுடன் கூடிய 103°F சுரம் காணப்பட்டது. குழந்தை தாயிடத்தில் சரியாக பால் சாப்பிடுகிறது இல்லை என்றும் தெரிந்தது.

மற்றும் விபரங்களை சுற்றத்தாரிடத்தில் கேட்டுத்தெரிந்து கொண்ட அளவில் இந்த அம்மாள் இந்த கிராமத்திற்கு புதுக்குடியாக வந்தவர்களென்றும் வயது 18 என்றும் முதல் பிரசவமென்றும் பெண் குழந்தையை சுகப் பிரசவமாய்ப் பெற்றெடுத்தாளென்றும், சுகஜீவியாயிருக்கிறது என்றும், இன்று ஐந்தாவது தினமென்றும்,

இரவிலிருந்து சுரம் காய்கிறதாயும், இந்த அம்மாள் பிரசவித்திருக்கிற வீட்டின்முன் ஒரு உபாத்தியாயர் வாசம் செய்து வந்தாரென்றும் ஏதோ காரணத்தால் தூக்கிட்டுக்கொண்டு இறந்தாரென்றும் அவர் ஆவி இந்த அம்மாளைப்பிடித்து ஆட்டுகிறதாயும் சொன்னார்கள். மற்றும் சிலர் "இது என்ன வைத்தியம் நம் நாட்டு வைத்தியனைக் கூப்பிட்டுப் பாருங்கள்" என்றார்கள்.

அன்னாரின் கணவர் நன்கு கற்றறிந்தவர். அவர் சொன்னார் "இது சாஸ்திரீகமான வைத்தியம்தான் வீண். போகாது" என்று.

இந்த நிலைமையில் ஆர்னிகாமொண்டானு 30-ல் ஒரு டோஸ் உள்ளுக்குக் கொடுத்துவிட்டு பாப்டீஷியா 3x ல் இரண்டு மணி நேரங்களுக்கு ஒரு டோஸ் வீதம் தினம் 6 டோஸ்கள் வீதம் 5 தினங்கள் தொடர்ந்து கொடுத்துவந்தேன். சுரமும் மற்றும் குறிகளும் நன்கு படிந்துவிட்டது. பிரசவத்தின்பின் ஏற்படும் கழிவு நீர் (Lochia) நன்கு தட்டுத்தடையின்றி வெளிப்பட ஆரம்பித்தது. தாய்ப்பால் நன்கு உற்பத்தி செய்யப்பட்டுவிட்டது. குழந்தை நன்றாகப் பால் சாப்பிட ஆரம்பித்துவிட்டது. சரீரத்தில் நன்றாக வியர்வை காணப்பட்டது. ஆயினும் தலை இடியும் தலைக்கனமும் தீர்ந்தபாடில்லை. க்ளோனாயின் 6-ல் 4 டோஸ்கள் கொடுக்கப்பட்டது. அதுவும் படிந்துவிட்டது. ஆனால் மலபந்தம் தீர்ந்தபாடே இல்லை. வீராட்ரம் ஆல்பம் 3-ல் ஆறு மணி நேரங்களுக்கு ஒரு டோஸ் வீதம் 2 டோஸ்கள் கொடுக்கப்பட்டதில் அதுவும் படிந்துவிட்டது.

ஆனால் இடது காதின் கீழ் உள்ள கோளம் சிவந்து வீங்கி வேதனை செய்தது, மெர்கூரியஸ் சோலுபுலிஸ் 6-ல் தினம் 3 டோஸ்கள் வீதம் இரண்டு தினங்கள் கொடுத்ததில் அதுவும் நீங்கி தாயும் சேயும் சுகசரீரிகளாக வளர்ந்து வருகிறார்கள்.

கீல்வாதம்

(டாக்டர் M. R. சாவித்திரி A. M. I. H. சூரமங்கலம்)

சுமார் 45 வயதுள்ள பெண்மணி அவர்கள் என்னிடம் அவரது பிணியையும் வைத்தியம் செய்துள்ள முறைகளையும் சொன்னார். "எனக்கு வலது காலில் கீல்வாயுவந்து 6 மாதமாகிறது. நான் இந்த 6 மாத காலமாக சேலத்தில் உள்ள அநேகப் பெரிய பெரிய வைத்தியர்களிடம் காட்டி ஊசிகளும், மருந்துகளையும் சாப்பிட்டேன். என் பணம் செலவானதுதான் மிச்சம். என் நோய் தீர்ந்தபாடில்லை. நீங்கள்தான் என் பிணியை போக்கவேண்டும். உங்களை நம்பித்தான் நான் வந்தேன் என்றார்கள்." மேலும் "என் திரேகமே ஊசிபோட்டு புண்ணாகிவிட்டதம்மா. ஆகையால் தாங்கள் ஊசி இல்லாமல் மருந்துமட்டும் கொடுங்கள் தயவுசெய்து' என்றும் சொன்னார்கள்.

அம்மையார் என்னுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, பெஞ்சியில் உட்கார்ந்திருந்தவர் காலை ஆட்டிக்கொண்டிருந்தார். அதைக் கண்டு நான் அவரை 'ஏன் இப்படி செய்கிறீர்கள்' என்று கேட்டேன். அதற்கு அவர் 'அப்படிக்காலை ஆட்டிக்கொண்டே இருந்தால்தான் எனக்கு கொஞ்சம் நன்றாக இருக்கிறது' என்றார். பிறகு 'இந்த வலிகளுக்கு சுடு தணணீர் (Hot water) ஊற்றிவருகிறேன். அவ்விதம் செய்வதால் வலி எனக்கு சாதகமாக இருக்கிறது' என்றார். 'சரி உட்காருங்கள் உங்களது வலியை நிறுத்திவிடுகிறேன்' என்றேன். 'எத்தனையோ பெரிய வைத்தியர்கள் பார்த்து தீர்க்கமுடியாத வலியை உங்களால் குணப்படுத்த முடியுமா?' என்றார்

நான் "நிச்சயம் கடவுளருளால் குணப்படுத்துகிறேன் கவலை இன்றி இருங்கள்" என்றேன், 'ஆனால் எனக்கு இப்போது ஒன்றும் நீங்கள் பணம் தரவேண்டாம் பரிபூரண சுகமானதும் கொடுங்கள்" என்றும் சொன்னேன். உடனே நான் அல்லோபதியில் அவர்கள் மருந்தும் சாப்பிட்டு, ஊசிகளும் போட்டு இருப்பதால், நக்ஸ்வாமிகா மூன்று வேளை கொடுத்து 'தினமும் நீங்கள் வந்து மருந்து வாங்கி போங்கள்' என்றேன். அடுத்தநாள் அம்மையார் சொன்ன குறிகளுள்ள மருந்தாகிய ரஸ்டாக்ஸ் தெளிவுபட தெரிந்தது. அன்று மூன்றுவேளைக்கு ரஸ்டாக்ஸ் கொடுத்து சாப்பிடும்படி அனுப்பினேன். 3வது நாள் சொன்னார்கள்:— "கொஞ்சம் சுரமும், தலைவலியும் இருந்தது. தாகமும், வாயும் நாக்கும் உலர்ந்து போகிறது என்றும் மருந்து சாப்பிட்ட

பின் வலியும் அதிகமாக இருக்கிறது'' என்றும் சொன்னார்கள். நான் கொடுத்த மருந்து வேலைசெய்வதைக் கேட்டு அளவில்லா களிப் படைந்தேன்.

உடனே சுரமும், தலைவலியும், தாகவறட்சையும் இருப்பதால் பிரயோனியாவும், ரஸ்டாக்சும் ஒவ்வொன்றிலும் மூன்று வேளை கொடுத்து மாற்றி மாற்றி சாப்பிட்டு வரசொன்னேன். பிறகு அந்த அம்மையாரிடம் சொன்னேன், "உபாதி அதிகமாவதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம், நாளைக்குள் உங்கள் பிணியாவும் நின்று சௌகரியமாக இருப்பீர்கள்'' என்று ஆறுதல் மொழிகளைக்கூறி அனுப்பினேன்.

4-வது நாள்:– 'சுரம் நின்றுவிட்டது என்றும், வலி பாதி நின்று விட்டது என்றால் இப்பொழுதெல்லாம் வேலைகளை செய்யமுடிகிறது' என்றும் சொன்னார்கள். அன்னாருக்கு 12 நாளில் பூரண குண மடைய செய்தேன்.

பின்பு அந்த அம்மாள் 'உன் கைராசி பரவாயில்லை டாக்டரம்மா. உனக்குச் இச்சிறு வயதிலேயே கடவுள் கைராசியை கொடுத்திருக் கிறார்' என்றார்கள். இன்னும் விவரிக்க இயலாத புகழ்மாலைகளை எனக்கும் ஹோமியோபதிக்கும் சூட்டினார்கள். பிறகு அவர்களால் இயன்ற சன்மானத்தை கொடுத்துவிட்டு சென்றார்கள்.

இன்று நான் எங்களது கிராம மக்களுக்கும், அயலூர் வாசிகளுக் கும் சிறந்த முறையில் வைத்தியம் செய்து வருகிறேன். சிறியோர் முதல் பெரியோர்வரை எல்லோரும் ஹோமியோபதியை விரும்பி வைத்தியம் செய்துகொள்கிறார்கள். எல்லா கேஸ்களிலும் வெற்றி யடைந்தே வருகிறேன் என் ஹோமியோபதியின் துணையாலும், தங்களது ஆசிர்வாதத்தினாலும்.

" வாழ்க ஹோமியோபதி "

குன்டோபாஸ்

"குன்டோபாஸ்" என்பது பயோ கெமிஸ்டிரி முறையில் முக்கியமான ஐந்து பாஸ்பேட்டுகளையும் கொண்ட ஒரு முக்கிய ஔஷதம்.

ஒவ்வொரு "குன்டோபாஸ்" மாத்திரையிலும், கல்கேரியா பாஸ், பெர்ரம் பாஸ், மெக்னிஷ்யா பாஸ், காலி பாஸ், நேட்ரம் பாஸ் இவை ஐந்தும் சரிசமமாக உள்ளன. இது ஒரு சாதாரண கலப்பு ஔஷதம் அல்ல. ஆனால் இந்தப் பாஸ்பேட்டுகளின் சுயநிலைமையில் கலக்கப்பட்டு, அதன்மேல் விரியப்படுத்தப் பட்டது ஆகும்.

"குன்டோபாஸ்' அனேக வியாதிகளில் மிகவும் உபயோககரமாக இருக்கிறது. முக்கியமாக நரம்பு சத்துக் குறைந்த உபாதிகளில் இது நல்ல வேலை செய்யும். வலிப்புகள், காக்கை வலிப்பு, மூளைக் கோளாறுகள், ஞாபக மறதி, நீரிழிவு, மதுமேகம், ஞாபகக் குறைவு, முதலிய வியாதிகளில் உபயோகிக்கலாம். பற்றுக்குறையும், அதிக அவசரமும் கலந்த இந்தக் காலங்களில், அதிக மூளை உழைப்புள்ள அனைவருக்கும் "குன்டோபாஸ்" ஒரு வரப்பிரசாதமே ஆகும்.

ஒவ்வொரு மாத்திரையும் 7½ க்ரெயின் எடை உள்ளது. இது பெரியவருக்கு ஒரு வேளை மருந்தாகும். சிறுவர்களுக்குப் பாதி அளவு, நாள் ஒன்றுக்கு மூன்று வேளைகள். கூடுமான வரையில் ஆகாரத்திற்கு முன்னதாக. 50 மாத்திரைகள் கொண்ட பாட்டில்கள் அழகான அட்டைப் பெட்டிகளில் கிடைக்கும்.

விலை ரூ. 3—0—0

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

கும்பகோணம் — மதராஸ்

வயிற்று உப்பிசம்

By Dr. V. பாக்கியநாதன், M.I.H மதுரை

1. "அர்ஜன்டம் நைட்ரிகம்": ஜீரணமாகாத ஆகாரம், ஏப்பம் விடுதல்—ஒவ்வொரு வேளை ஆகாரத்திற்கு பிறகும் வயிறு உப்பிக் கொள்ளுதல்—வயிறு வெடித்துவிடும்போல் உள்ள அளவுக்கு வாயு உற்பத்தியாகுதல், பிறகு வேகமாக ஏப்பம் வெளிவருதல், வயிற்றில் இரைச்சல். ஆடை அணிய சகிக்காமை.

2. கார்போ வெஜிடாபிலிஸ்: பால் குடித்தால் புளித்த ஏப்பமும் உப்பிசமும் உண்டாகும், சதா ஏப்பம்விடவேண்டி வருதல், அதனால் சிறிது சமனம். பலமான இரைச்சல், நாற்றமுள்ள அபானவாயு அபானவாயு வெளியேற்றப்பட்டால் சமனம். எவ்வளவு இலகுவான ஆகாரங்கள் சாப்பிட்டாலும் சீரணமாவதில்லை.

3. சைனா: வயிற்றில் ஏராளமான உப்பிசம். பால் ஒத்துக் கொள்ளாது. எவ்வளவு ஏப்பம் வந்தாலும் தொந்திரவு குறைவதில்லை பழ வகைகள் உட்கொண்டால் வயிற்றில் உப்பிசம் அதிகமாகும், ஆனால், சரீரத்தை இரண்டாக மடிப்பதினால் சமனம், வயிற்றில் பெரிய பந்து இருப்பதுபோன்ற உப்பிசம்.

4. காலி கார்பானிகம்: வெடித்துவிடுமோ என்ற அளவுக்கு வயிற்றில் உப்பிசம், நாம் உட்கொள்ளும் ஆகாரம் காற்றாக மாறிவிடுமோ என்ற பயம், இனிப்பு பதார்த்தங்களில் பிரியம், வயிற்றில் ஏதோ உருண்டையான வஸ்து இருப்பது போன்ற தோற்றம். வயிற்றில் எரிச்சலும் உப்பிசமும், புளித்த ஏப்பம், புளித்த வாயாலெடுப்பு, குமட்டல், படுத்தால் சமனம்.

5. நக்ஸ் மாஸ்சாடா: நாம் சாப்பிடும் ஒவ்வொரு ஆகாரமும் காற்றாக மாறி மார்பு இறுக்குவது போன்றிருத்தல், வயிற்றில் அதிக இரைச்சல், ஆகாரம் சாப்பிட்டவுடன் ஏராளமாக வயிறு உப்பி விடுதல்.

6. நக்ஸ்வாமிகா:- நாம் ஆகாரம் உட்கொண்ட மூன்று மணிக்கு வயிற்றில் உப்பிசமும் கனமும், ஏப்பம் புளிப்பாகவும் கசப்பாகவும்

இருக்கும், ஆகாரத்திற்கு பின் உப்பிசம். முன் சாப்பிட்ட ஆகாரம் அப்படியே வாயாலெடுக்கப்படுதல்.

7. லிக்கோபோடியம்: இனிப்பான பதார்த்தங்களில் பிரியம். ஆனல் சில வாய்கள் சாப்பிட்டவுடனே வயிறு நிறைந்துவிட்டது போன்று உப்பிவிடுதல், புளித்த ஏப்பங்கள், எவ்வளவு ஏப்பம் வந்தாலும் வயிற்று உப்பிசம் குறையாது. வாயுத்தொந்திரவு காரணமாக வயிற்றில் கடபுடா சப்தம், இரவுகளில் அதிகம், வயிற்றில் வாயு எப்பொழுதும் உற்பத்தியாகிக்கொண்டே இருத்தல். குறிப்பாக கல்லீரல் கோளங்களினுல் பொருமல் அதிகம்.

8. ரபேனஸ்: வயிறு உப்பி, காற்று அதிகமாகி பெரிய பானை போல் ஆகிவிடுதல், காற்று வெளியேற கஷ்டம், இங்கும் அங்கும் வயிற்றில் வீக்கம், ரண சிகிச்சை செய்தபின் ஏற்படும் வாயு உப்பிசம்.

ஸ்திரீகளின் சகல கர்ப்பாசயக் கோளாறுகளுக்கும்

"சோதரி"

நிகரற்ற ஔஷதம்

விபரங்களுக்கு:

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

ஹோமியோ ஹவுஸ் — கும்பகோணம்

ஹோமியோபதியின் வேதாந்தம்

(பம்பாய் Dr. S. N. K. மூர்த்தி)

ஸ்லோகம் 171

கொனேரியா சிபிலிஸ் இந்த இரண்டு வியாதிகளை தவிர்த்து சாதாரணமாக ஸோராவிலிருந்து உண்டாகும் வியாதிகளுக்கு முழுவதும் சொஸ்தம் செய்வதற்கு அடுத்தடுத்து பல ஆண்டிஸோரிக் (Antipsori) மருந்துகள் கொடுக்கவேண்டி வரும். ஆனால் ஒவ்வொரு தடவையும் முன் கொடுத்த மருந்தின் செய்கை முடிவடையும் வரையில் மற்றொரு மருந்தைக் கொடுக்கக்கூடாது.

ஸ்லோகம் 172

வியாதியினுடைய குறிகள் மிகவும் குறைவாக இருப்பதால் வியாதியை முற்றிலும் குணம் செய்வதற்கு தடை ஏற்படலாம். இதை மனதில் வைத்துக்கொண்டு இந்தக்குறிகளை நம் உன்னதமான முறையினால் நீக்கிவிட்டால் வழியில் (குணம் செய்யும் வழியில்) உண்டாகும் பலவிதமான தடங்கல்களையும் நீக்கிவிடும்.

ஸ்லோகம் 173

சில வியாதிகளில் குறிகள் மிகவும் குறைவாக இருப்பதினால் குணம் செய்வதற்கு தடங்கல் ஏற்படலாம். இவைகளை ஒரு பக்க வியாதி என்று சொல்லலாம். ஏனென்றால் இரண்டு மூன்று முக்கியமான குறிகள் மற்றக் குறிகளை மறைத்துவிடுகின்றன. இவைகள் (Chronic) நீடித்த வியாதிகளின் இனத்தை சேர்ந்தவையாகும்.

ஸ்லோகம் 174

அப்படித் தோன்றும் முக்கிய குறியானது ஆழ்ந்து இருக்கும் குறிகளாகவும் இருக்கலாம். (நாட்பட்ட தலைவலி; நீடித்த வயிற்றுப்போக்கு; பழைய ஹிருதய வலி) அல்லது பொதுவான வெளிப்பட்ட குறிகளாகவும் இருக்கலாம், பின் சொல்லப்பட்டவை தற்காலத்தில் தோன்றிய உடம்பில் ஆழ்ந்து இராமல் மேலேயே தோன்றின குறிகளாக இருக்கலாம்.

ஸ்லோகம் 175

ஒரு தரப்பட்ட வியாதிகளில் வியாதி நிவர்த்தி செய்பவர் தற்போது இருக்கும் குறிகளை சரிவர கவனித்து வியாதியின் முழுத்

தோற்றத்தையும் அறியாததுதான். (173ம் ஸ்லோகத்தை கவனிக்கவும்) குறிகள் மிகவும் சொற்பமாக இருந்து குணம் செய்வதற்கு சுலபமாக இல்லாத வியாதிகள் ஒரு தரப்பட்ட (One sided) வியாதிகள் எனப்படும்.

ஸ்லோகம் 176

இன்னும் சில வியாதிகள் இருக்கின்றன. இவைகளை ஆழ்ந்து கவனிப்போமானால் (ஸ்லோகம் 84 முதல் 98 வரையிலும் சொன்ன பிரகாரம் கவனித்துப் பார்த்தல்) ஒன்று அல்லது இரண்டு முக்கியமான அதிக உக்கிரமான குறிகளைத்தவிர மற்றக்குறிகள் மிகவும் உபாயமாக இருந்து விசேஷத் தன்மைகளை (Modalitis etc.) தெளிவாக தோற்றுவிக்காது.

ஸ்லோகம் 177

இதுமாதிரியான சிக்கலான கேஸ்களை நிச்சயமாக குணம் செய்வதற்கு (இவைகள் மிகவும் அபூர்வமாகத்தான் தென்படுகின்றன) முதலில் தோன்றும் சில முக்கியமான குறிகளை வைத்துக்கொண்டு அதற்கு தகுந்த மிகவும் பொருத்தமாயுள்ள மருந்தை கொடுக்க வேண்டும்.

ஸ்லோகம் 178

சில சமயங்களில் இப்படிப் பொறுக்கி எடுத்த மருந்து நம் ஹோமியோபதியின் இயற்கை முறைப்படி தற்போதுள்ள வியாதியை நீக்குவதற்கு அதைப்போன்ற ஒரு தோன்றி மறையும் (Artificial) வியாதியை உண்டாக்குகிறது.

இப்படித் தோன்றுவது எந்த கேஸ்களில் மிகவும் சில முக்கியமான அபூர்வமாக மிகவும் எளிதில் மனதுக்கு புலப்படும் குறிகள் தோன்றுகிறதோ அவைகளில்தான்.

ஸ்லோகம் 179

பலதடவை, இப்படியும் ஆகலாம். அதாவது மிகவும் குறைந்த குறிகளைக்கொண்டு பொறுக்கப்பட்ட மருந்து, இருக்கும் வியாதியை குறிகளின் குறைவினால் சிறிதே குணமடையச் செய்யும்.

(தொடரும்)

Edited, Printed & Published by Dr. V. R. MURTY, at the Homoeopathy Press, Homeo House, Kumbakonam.